**O.S.No.35/2018 நாள் 15.06.2026 PW2 – திரு.ஸ்டாலின்**

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

**குறுக்கு விசாரணை (1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில்) :**

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.30 31.07.1981 தேதியிட்ட இறுதிநிலை தீர்ப்பாணையில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் பொன்னம்மாளுக்கு சர்வே எண்.1533ல் 2 ஏக்கர் 12 செண்ட் ஒதுக்கப்பட்டுள்ளதையும் மற்ற பாகஸ்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தையும் பற்றி சொல்லப்பட்டுள்ளது. பொன்னம்மாளுக்கு பிரிவின்றி 2 ஏக்கர் 12 செண்ட் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால் அதை நான் குறிப்பிட்டு பார்க்கவில்லை. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களிலும் பொன்னம்மாளுக்கு பிரிவின்றி சொத்து பாத்தியப்பட்டதாக சொல்லப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். பிரிவின்றி கிரையமாகியுள்ள நிலையில் தாவா வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை 6ம் பிரதிவாதி தரப்பில்**

முதல்விசாரணையில் சொல்லியுள்ள EP No.34/2011 வழக்கு விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி மனுவில் சொத்து அடையாளம் காணப்பட்டு சொத்து வாழ்விப்பு செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டு அதற்குரிய கிரைய சான்றிதழும் வழங்கப்பட்டது என்றால் சரிதான். சொத்து எனது தகப்பனாராக வாதி பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். 17.4.2026 அன்று எனது தகப்பனார் ஊரில் தான் இருந்தார் என்றால் சரிதான். EP No.34/2011 வழக்கு சம்மந்தப்பட்ட அசல் வழக்கின் ஆவணங்கள் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். என் தகப்பனாருக்கும் எனக்கும் தாவா சொத்தை ஏற்கனவே அடையாளப்படுத்தி கொடுக்கப்பட்டுவிட்டது என்றாலும் பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க வேண்டி இந்த வழக்கை எனது தகப்பனார் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.